சோலார் மின்சாரம்
கனரக தொழிற்சாலைகள், டையிங், நூல் மில்களுக்கு தேவையான சோலார் மின்சாரம் குறைந்த விலையில் சப்ளை செய்கிறோம்
தொடர்புக்கு
96005 48581

# சக்கர வியூகம்
புலனாய்வு நாளிதழ்

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 189 02.1.2026 FRIDAY MARGAZHI : 18 PRICE : RS.5/-
மலர் : 01 இதழ் : 189 02.1.2026 வெள்ளிக்கிழமை மார்கழி : 18 விலை : ரூ.5/–

3 போலி ஆவணங்கள் மூலம் சிங்கப்பூரை சேர்ந்த மூதாட்டியின் ரூ.800 கோடி சொத்துகள் மோசடி

4 பொங்கலுக்கு பின் கூட்டணி நிலை குறித்து உறுதியான தகவல் வெளியாகும்: நயினார் நாகேந்திரன்

2 சென்னையில் விபத்துகள், குற்றங்கள் இல்லாத புத்தாண்டு தினம்: காவலர்களுக்கு ஆணையர் அருண் பாராட்டு

## டிச., மாத ஜிஎஸ்டி வசூல்

# “ரூ.1.75 லட்சம் கோடி”

## 6.1 சதவீதம் அதிகம்




புதுடில்லி: ஜன.2-

கடந்த 2025ம் ஆண்டின் டிசம்பர் மாதம் நாட்டின் மொத்த ஜிஎஸ்டி வசூல் 1.75 லட்சம் கோடி ரூபாய் வசூல் ஆகியுள்ளதாக மத்திய நிதியமைச்சகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: டிசம்பர் மாதம் 1,74,550 கோடி ரூபாய் ஜிஎஸ்டி வசூல் ஆகியுள்ளது. அதில், சிஜிஎஸ்டி 34,289 கோடி, எஸ்ஜிஎஸ்டி 41,368 கோடி, ஐஜிஎஸ்டி 98,394 கோடி ரூபாய் வசூல் ஆகியுள்ளது. இது அதற்கு முந்தைய ஆண்டு டிசம்பர் மாதம் வசூல் ஆன 1.64 லட்சம் கோடியை விட 6.1 சதவீதம் அதிகம் ஆகும்.

2025 டிச., மாதம் ஜிஎஸ்டி வசூலில் சிஜிஎஸ்டி மற்றும் எஸ்ஜிஎஸ்டி வசூல் அதிகரித்து இருந்தாலும் ஐஜிஎஸ்டி வசூல் சரிவை சந்தித்துள்ளது.

2025 2026 நிதியாண்டில் ஏப்ரல் முதல் டிசம்பர் வரையிலான காலகட்டத்தில் 16.5 லட்சம் கோடி ரூபாய் ஜிஎஸ்டி வசூல் ஆகி உள்ளது. இது அதற்கு முந்தைய ஆண்டை காட்டிலும் 8.6 சதவீதம் அதிகம் ஆகும்.

மேலும் 2024 2025 நிதியாண்டில் மொத்த ஜிஎஸ்டி வசூலானது 22.08 லட்சம் கோடி ரூபாய் ஆக இருந்தது. 2017 ல் ஜிஎஸ்டி அறிமுகம் செய்யப்பட்ட பிறகு, ஒரு மாதத்தில் அதிகபட்சமாக 1.82 லட்சம் கோடி ரூபாய் வசூல் ஆகியது. வளர்ந்து வரும் பொருளாதார நடவடிக்கைகள் காரணமாக ஆண்டுதோறும் மொத்த ஜிஎஸ்டி வசூலும் அதிகரித்து வருகிறது. 2020 2021 ல் 11.37 லட்சம் கோடி ரூபாய் ஆக இருந்த மொத்த ஜிஎஸ்டி வசூல் 2023 24 நிதியாண்டில் 20.18 லட்சம் கோடி ரூபாய் ஆக அதிகரித்தது. இவ்வாறு அநுபேத அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

முந்தைய மாத ஜிஎஸ்டி வசூல் விவரம்

* நவம்பர் மாதம் ரூ.1.70 லட்சம் கோடி
* அக்டோபர் மாதம் ரூ.1.96 லட்சம் கோடி
* செப்டம்பர் மாதம் ரூ.1.89 லட்சம் கோடி
* ஆகஸ்ட் மாதம் ரூ.1.86 லட்சம் கோடி
* ஜூலை மாதம் ரூ.1.96 லட்சம் கோடி
* ஜூன் மாதம் ரூ.1.84 லட்சம் கோடி
* மே மாதம் ரூ.2.01 லட்சம் கோடி
* ஏப்ரல் மாதம் ரூ.2.36 லட்சம் கோடி
* மார்ச் மாதம் ரூ.1.96 லட்சம் கோடி
* பிப்., மாதம் ரூ.1.84 லட்சம் கோடி
* ஜன., மாதம் ரூ.1.96 லட்சம் கோடி ஜிஎஸ்டி வசூல் ஆகி உள்ளது



■ மதுரை மேற்கு வட்டம், மேலக்குயில்குடி ஊராட்சியில் மாவட்ட ஆட்சியரின் மக்கள் தொடர்பு முகாமில் அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே. பிரவீன்குமார் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் திரு.க.அன்பழகன் அவர்கள் உடன் உள்ளார்

## அரசு ஊழியர், ஓய்வூதியர்களுக்கு பொங்கல் போனஸ் அறிவிப்பு

### ரூ.183 கோடி ஒதுக்கி முதல்வர் ஸ்டாலின் உத்தரவு



சென்னை: ஜன.2-

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு மிகை ஊதியம் (போனஸ்) மற்றும் பொங்கல் பரிசு வழங்க ரூ.183.86 கோடி நிதி ஒதுக்கி முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். அதன்படி, ‘சி’, ‘டி’ பிரிவை சார்ந்த பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ரூ.3,000 என்ற உச்சவரம்புக்கு உட்பட்டு மிகை ஊதியம் வழங்கப்படும்.

இது தொடர்பாக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது: “தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், இந்தியாவுக்கே வழிகாட்டக்கூடிய வகையில், பள்ளிக்கல்வி தொடங்கி உயர்கல்வி வரை, வேளாண் வளர்ச்சி முதல் தொழில்துறை வளர்ச்சி வரை, பள்ளி சிறார்களுக்கு காலை உணவு தொடங்கி, அவர்தம் ஆற்றலையும் அறிவினையும் பெருக்கிட நான் முதல்வன் வரை, மகளிருக்கு உரிமைத்தொகை தொடங்கி, மாணவக் கண்மணிகளுக்குத் புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் வரை துறைதோறும் பல முன்னோடி திட்டங்களை, எல்லார்க்கும் எல்லாம் என்ற அடிப்படையில் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார்.

நாடுபோற்றும் இத்திட்டங்களை கடைக்கோடி மக்களுக்கும் கொண்டு சேர்த்திட அயராது பணியாற்றிவரும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள், தமிழர் திருநாளாம் பொங்கல் திருவிழாவினை எழுச்சியோடு கொண்டாடி மகிழ 20242025ஆம் ஆண்டுக்கான மிகை ஊதியம் மற்றும் பொங்கல் பரிசு வழங்கிட 183 கோடியே 86 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார். இதன்படி சுமார் 9 இலட்சத்து 90 ஆயிரம் பேர் பயனடைவார்கள். இந்த உத்தரவின்படி,

1. ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவைச் (C & D Group) சார்ந்த பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ரூபாய் 3,000 என்ற உச்சவரம்பிற்குட்பட்டு மிகை ஊதியம் வழங்கப்படும்.

2. தொகுப்பூதியம், சிறப்புகால முறை ஊதியம் பெறும் பணியாளர்கள் மற்றும் 20242025ஆம் நிதியாண்டில் குறைந்தபட்சம் 240 நாட்கள் அல்லது அதற்கு மேலாகப் பணிபுரிந்து சில்லரைச் செலவினத்தின் கீழ் மாத அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் பெறும் முழுநேர மற்றும் பகுதி நேரப் பணியாளர்கள் ஆகியோருக்கு ரூபாய் 1,000 சிறப்பு மிகை ஊதியம் வழங்கப்படும்

3. “சி” மற்றும் “டி” பிரிவைச் சார்ந்த ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள், முன்னாள் கிராம பணியமைப்பு (முன்னாள் கிராம அலுவலர்கள், கிராம உதவியாளர்கள்) மற்றும் அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் ஆகியோருக்கு ரூபாய் 1,000 பொங்கல் பரிசாக வழங்கப்படும்.” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அதிமுகவில் 10,175 பேர் விருப்ப மனு; இபிஎஸ் பெயரில் 2,187 மனுக்கள்!



சென்னை: ஜன.2–

தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா சட்டப்பேரவைத் தேர்தல்களில் அதிமுக சார்பில் போட்டியிட விருப்பம் தெரிவித்து 7,988 பேர் விருப்ப மனுக்களைப் பெற்றுள்ளதாகவும், தங்கள் தொகுதியில் எடப்பாடி பழனிசாமி போட்டியிட 2,187 பேர் விருப்ப மனுக்களை பெற்றுள்ளதாகவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அதிமுக வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘‘தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல், புதுச்சேரி மற்றும் கேரள மாநில சட்டமன்றப் பொதுத் தேர்தல்கள் விரைவில் நடைபெற உள்ளதை முன்னிட்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்நாடு முன்னாள் முதல்வருமான எடப்பாடி பழனிசாமி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வேட்பாளர்களாகப் போட்டியிட விரும்பும் கட்சியினர் தங்களுடைய விருப்ப மனுக்களை, சென்னை, ராயப்பேட்டை, அவ்வை சண்முகம் சாலையில் உள்ள தலைமைக் கழக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மாளிகையில், 15.12.2025 முதல் 23.12.2025 வரையிலும், மற்றும் 28.12.2025 முதல் 31.12.2025 வரையிலும் வழங்கலாம் என அறிவிப்பு வெளியிட்டிருந்தார்.

அந்த அறிவிப்பின் பேரில், ஏராளமானோர் விருப்ப மனுக்களை வழங்கி உள்ளனர். அதன்படி, எடப்பாடி பழனிசாமி, ‘தங்களது தொகுதிகளில் போட்டியிட வேண்டும் என்று விருப்பம் தெரிவித்து 2,187 விருப்ப மனுக்களும், கட்சி நிர்வாகிகள் மற்றும் கட்சியினர் ‘தங்களுக்கு போட்டியிட வாய்ப்பு வேண்டி’, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் கேரளா உட்பட 7,988 விருப்ப மனுக்களும், ஆக மொத்தம் 10,175 விருப்ப மனுக்கள் பெறப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்’’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இந்த ஆண்டு நடைபெறும் சட்டப்பேரவை தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதில் அதிமுக தீவிரமாக உள்ளது. பாஜகவுடன் கூட்டணி அமைத்தாலும், தனித்து ஆட்சி என்பதிலும் உறுதியாக உள்ளது.

இந்நிலையில், கடந்த டிச.15 முதல், சென்னையில் உள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில் விருப்ப மனுக்கள் விநியோகிக்கப்பட்டு வந்தது. அந்த மனுக்களில் 25 கேள்விகள் கேட்கப்பட்டிருந்தன. பொது மற்றும் தனித்தொகுதிகள் அனைத்துக்கும் ரூ.15 ஆயிரம் செலுத்தி மனுக்கள் பெறப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## அணுசக்தி நிலையங்கள் பட்டியல்: இந்தியா பாகிஸ்தான் தகவல் பரிமாற்றம்

புதுடில்லி: ஜன.2-

இந்தியா மற்றும் பாகிஸ்தானில் உள்ள அணுசக்தி நிலையங்கள் குறித்த பட்டியலை 1988 ம் ஆண்டு போடப்பட்ட ஒப்பந்தப்படி, இரு நாடுகளும் பரஸ்பரம் பகிர்ந்து கொண்டுள்ளன.

இந்தியா, பாகிஸ்தான் இடையே, கடந்த, 1988ம் ஆண்டு டிசம்பர் 31ம் தேதியன்று ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இதன்படி இரு நாடுகளுக்கு இடையிலான மோதலின் அணுசக்தி நிலையங்கள் மீது தாக்குதல் நடத்துவதை நிறுத்துவதே இதன் நோக்கம் ஆகும்.

இந்த ஒப்பந்தம் 1991ம் ஆண்டு ஜன.,27 ல் அமலுக்கு கொண்டு வரப்பட்டது. பிறகு 1992ம் ஆண்டு ஜன.,1 ம் தேதி முதல்,இரு நாடுகளும், தங்களின் அணு மின் நிலையங்கள், அணு சக்தியால் இயங்கும் பிற அமைப்புகள் குறித்த பட்டியலை, பரஸ்பரம் பரிமாறிக் கொள்வது வழக்கம். ஒவ்வொரு ஆண்டும், ஜன., 1ம் தேதி, இந்தப் பட்டியல், இருநாடுகளின் வெளியுறவுத்துறை மற்றும் தூதரகங்கள் வாயிலாக பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளப்படும்.

அந்த வகையில், தொடர்ந்து 35வது முறையாக இரு நாடுகளும் பரஸ்பரமாக அணுசக்தி நிலையங்கள் தொடர்பான தகவல்களை பரிமாறிக் கொண்டன. டில்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளிடம் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் இந்த தகவலை அளித்தது.

அதேபோல், இஸ்லாமாபாத்தில் உள்ள இந்தியத் தூதரகத்திடம் பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சகம் பட்டியலை அளித்தது.

பஹல்காம் தாக்குதல் மற்றும் ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கு இடையிலான உறவு மோசமாக உள்ளது. இருப்பினும், இந்த ஒப்பந்தப்படி அணுசக்தி நிலையங்கள் குறித்த பட்டியல் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளது.

# அரசு ஊழியர், ஓய்வூதியர்களுக்கு பொங்கல் போனஸ் அறிவிப்பு: ரூ.183 கோடி ஒதுக்கி முதல்வர் ஸ்டாலின் உத்தரவு



சென்னை, ஜன.02-

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு 2025 25ம் ஆண்டுக்கான மிகை ஊதியம் (போனஸ்) மற்றும் பொங்கல் பரிசு வழங்க ரூ.183.86 கோடி நிதி ஒதுக்கி முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். அதன்படி, 'சி', 'டி' பிரிவை சார்ந்த பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ரூ.3,000 என்ற உச்சவரம்புக்கு உட்பட்டு மிகை ஊதியம் வழங்கப்படும்.

இது தொடர்பாக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது: "தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், இந்தியாவுக்கே வழிகாட்டக்கூடிய வகையில், பள்ளிக்கல்வி தொடங்கி உயர்கல்வி வரை, வேளாண் வளர்ச்சி முதல் தொழில்துறை வளர்ச்சி வரை, பள்ளி சிறார்களுக்கு காலை உணவு தொடங்கி, அவர்தம் ஆற்றலையும் அறிவினையும் பெருக்கிட நான் முதல்வன் வரை, மகளிருக்கு உரிமைத்தொகை தொடங்கி, மாணவக் கண்மணிகளுக்குத் புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் வரை துறைதோறும் பல முன்னோடி திட்டங்களை, எல்லார்க்கும் எல்லாம் என்ற அடிப்படையில் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார்.

நாடுபோற்றும் இத்திட்டங்களை கடைக்கோடி மக்களுக்கும் கொண்டு சேர்த்திட அயராது பணியாற்றிவரும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள், தமிழர் திருநாளாம் பொங்கல் திருவிழாவினை எழுச்சியோடு கொண்டாடி மகிழ 2024 2025ஆம் ஆண்டுக்கான மிகை ஊதியம் மற்றும் பொங்கல் பரிசு வழங்கிட 183 கோடியே 86 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார். இதன்படி சுமார் 9 இலட்சத்து 90 ஆயிரம் பேர் பயனடைவார்கள். இந்த உத்தரவின்படி,

1. 'சி' மற்றும் 'டி' பிரிவைச் (C & D Group) சார்ந்த பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ரூபாய் 3,000 என்ற உச்சவரம்பிற்குட்பட்டு மிகை ஊதியம் வழங்கப்படும்.

2. தொகுப்பூதியம், சிறப்புகால முறை ஊதியம் பெறும் பணியாளர்கள் மற்றும் 2024 2025ஆம் நிதியாண்டில் குறைந்தபட்சம் 240 நாட்கள் அல்லது அதற்கு மேலாகப் பணிபுரிந்து சில்லரைச் செலவினத்தின் கீழ் மாத அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் பெறும் முழுநேர மற்றும் பகுதி நேரப் பணியாளர்கள் ஆகியோருக்கு ரூபாய் 1,000 சிறப்பு மிகை ஊதியம் வழங்கப்படும்

3. "சி" மற்றும் "டி" பிரிவைச் சார்ந்த ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள், முன்னாள் கிராம பணியமைப்பு (முன்னாள் கிராம அலுவலர்கள், கிராம உதவியாளர்கள்) மற்றும் அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் ஆகியோருக்கு ரூபாய் 1,000 பொங்கல் பரிசாக வழங்கப்படும்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆங்கிலப் புத்தாண்டு கோலாகலம்: சென்னையில் கிறிஸ்தவ ஆலயங்களில் நள்ளிரவு சிறப்பு பிரார்த்தனை



சென்னை, ஜன.02-

ஆங்கிலப் புத்தாண்டையொட்டி கிறிஸ்தவ ஆலயங்களில் நேற்று நள்ளிரவு சிறப்பு திருப்பலியும், சிறப்பு ஆராதனைகளும் நடைபெற்றன. இதில் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் புத்தாடை அணிந்து உற்சாகமாகக் கலந்து கொண்டனர்.

2025ம் ஆண்டு நேற்றுடன் நிறைவடைந்து இன்று 2026 புத்தாண்டு பிறந்துள்ளது. இதையொட்டி கிறிஸ்தவ ஆலயங்களில் புத்தாண்டு உற்சாகமாகக் கொண்டாடப்பட்டது. சாந்தோம் பேராலயத்தில் சென்னை மயிலை உயர் மறை மாவட்ட பேராயர் ஜார்ஜ் அந்தோணிசாமி தலைமையில் நேற்று நள்ளிரவு 11.30 மணி அளவில் சிறப்பு திருப்பலியும் புத்தாண்டு ஆராதனையும் நடந்தன. இதில் ஏராளான கிறிஸ்தவர்கள் புத்தாடை அணிந்து உற்சாகமாகக் கலந்துகொண்டனர்.


இதேபோல், பெசன்ட் நகர் அன்னை வேளாங்கண்ணி திருத்தலம், மயிலாப்பூர் பிரகாச மாதா ஆலயம் (லஸ் சர்ச்), ராயப்பேட்டை காணிக்கை அன்னை ஆலயம், எழும்பூர் திருஇருதய ஆண்டவர் திருத்தலம், புதுப்பேட்டை புனித அந்தோணியார் ஆலயம், பாரிமுனை தூய மரியன்னை இணை பேராலயம், பரங்கிமலை புனித தோமையார் ஆலயம் உள்ளிட்ட கத்தோலிக்க தேவாலயங்களிலும் நள்ளிரவு சிறப்பு திருப்பலி நிறைவேற்றப்பட்டது. ஆலயத்துக்கு வந்திருந்தவர்கள் புத்தாண்டு வாழ்த்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.

மேலும், சிஎஸ்ஐ திருமண்டல தலைமை ஆலயமான கதீட்ரல் பேராலயம், பழமை வாய்ந்த வேப்பேரி புனித அந்திரேயா ஆலயம், மயிலாப்பூர் குட் ஷெப்பர்டு ஆலயம், ராயப்பேட்டை வெஸ்லி ஆலயம், எழும்பூர் புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் உள்ளிட்ட ஆலயங்களிலும் புத்தாண்டு சிறப்பு ஆராதனைகள் நடைபெற்றன.

புறநகர் பகுதிகளிலும் நேற்று நள்ளிரவு சிறப்பு திருப்பலியும் ஆராதனையும் நடைபெற்றன. மறைமலைநகர் பாவேந்தர் சாலையில் உள்ள தூய விண்ணரசி அன்னை ஆலயத்தில் பங்குத்தந்தை அலெக்சிஸ் மனோகர் தலைமையில் நடைபெற்ற சிறப்பு திருப்பலியில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

தாம்பரம் பாத்திமா அன்னை ஆலயம், குரோம் பேட்டை அமலஉற்ப அன்னை ஆலயம், கூடுவாஞ்சேரி நல்மேய்ப்பர் ஆலயம், ஊரப்பாக்கம் ஆரோக்கிய அன்னை ஆலயம், காட்டாங்கொளத்தூர் புனித லூர்து அன்னை ஆலயம், ரயில் நகர் புனித அந்தோணியார் ஆலயம், எம்டிசி நகர் ஆரோக்கிய அன்னை ஆலயம் உள்ளிட்ட ஆலயங்களிலும் புத்தாண்டு சிறப்பு திருப்பலியும், ஆராதனையும் நடைபெற்றன.

# ஸ்ரீஹரிகோட்டாவில் எஸ்எஸ்எல்வி ராக்கெட்டின் 3ம் கட்ட இயந்திரம் வெற்றிகர பரிசோதனை



ஸ்ரீஹரிகோட்டா, ஜன.02-

சிறிய ரக செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவுவதற்காக எஸ்எஸ்எல்வி ராக்கெட் உருவாக்கப்பட்டது. இதில் 3ம் கட்ட இயந்திரம் தற்போது மேம்படுத்தப்பட்டுள்ளது.

திட எரிபொருளில் இயங்கும் இந்த இயந்திரம் ஆந்திராவின் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் நேற்று முன்தினம் வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டது. இந்த திட எரிபொருள் இயந்திரம் ராக்கெட்டுக்கு வினாடிக்கு 4 கி.மீ. வேகத்தை கொடுக்கும். சிறிய ரக செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவுவதற்காக எஸ் எஸ் எல்வி ராக்கெட் உருவாக்கப்பட்டது. இதில் 3ம் கட்ட இயந்திரம் தற்போது மேம்படுத்தப்பட்டுள்ளது.

திட எரிபொருளில் இயங்கும் இந்த இயந்திரம் ஆந்திராவின் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் நேற்று முன்தினம் வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டது. இந்த திட எரிபொருள் இயந்திரம் ராக்கெட்டுக்கு வினாடிக்கு 4 கி.மீ. வேகத்தை கொடுக்கும்.

எஸ்எஸ்எல்வி ராக்கெட் திறம்பட செயல்படும் வகையில் இதன் 3ம் கட்ட இயந்திரத்தில் உள்ள இக்னைட்டர், கூம்பு குழாய்கள் ஆகியவற்றின் வடிவம் மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்த பரிசோதனை 108 வினாடிகள் நடைபெற்றது. இந்த சோதனை வெற்றிகரமாக அமைந்ததன் மூலம், மேம்படுத்தப்பட்ட 3ம் கட்ட இயந்திரம் ராக்கெட்டில் பொருத்த தகுதி பெற்றுள்ளது.

ஸ்ரீஹரிகோட்டாவில் கடந்தாண்டு ஜூலை மாதம் திட எரிபொருள் இயந்திரம் தயாரிப்பு மையம் தொடங்கப்பட்டது. உள்நாட்டு தொழில் நுட்பம் மூலம் 10 டன் எடையுள்ள திட எரிபொருள் கலவை இயந்திரம் சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இது உலகின் பெரிய திட எரிபொருள் கலவை இயந்திரமாகும்.

சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் அமைந்துள்ள திட எரிபொருள் இயந்திர தயாரிப்பு மையம் மற்றும் பரிசோதனை மையம் மூலம் ஸ்டார்ட் அப் நிறுவனம் முதல்முறையாக ஏவவுள்ள முதல் ராக்கெட்டின் திட எரிபொருள் மோட்டார் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டுள்ளது.

# டி.வி., காஸ் அடுப்புக்கு 'ஸ்டார் ரேட்டிங்' கட்டாயம்

புதுடெல்லி, ஜன.02-

டி.வி., காஸ் அடுப்பு உள்ளிட்ட பொருட்களுக்கு இன்று முதல் எரிசக்தி சிக்கனம் தொடர்பான 'ஸ்டார் ரேட்டிங்' கட்டாயம் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

மத்திய அரசு ஏற்கெனவே ஏசி, வாட்டர் ஹீட்டர், சீலிங் ஃபேன், வாஷிங் மெஷின், எல்இடி விளக்குகள் உள்ளிட்ட பொருட்களுக்கு எரிசக்தி சிக்கனம் தொடர்பான ஸ்டார் ரேட்டிங் (நட்சத்திர குறியீடு) கட்டாயம் என அறிவித்துள்ளது.

இந்நிலையில் ப்ரிட்ஜ், டி.வி, எல்பிஜி காஸ் ஸ்டவ், கூலிங் டவர், சில்லர் உள்ளிட்ட பொருட்களுக்கு இன்று முதல் ஸ்டார் ரேட்டிங் கட்டாயம் என மத்திய அரசு தற்போது அறிவித்துள்ளது.

# வந்தே பாரத் ரயிலின் 180 கி.மீ. அதிவேக சோதனை வெற்றி

புதுடெல்லி, ஜன.02-

ரயில்வே பாதுகாப்பு ஆணையரின் (சிஆர்எஸ்) மேற்பார்வையின் கீழ் உள்நாட்டிலேயே வடிவமைக்கப் பட்ட படுக்கை வசதி கொண்ட வந்தே பாரத் ரயிலின் 180 கி.மீ. அதிவேக சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இந்த சோதனை கோட்டா நாக்டா பிரிவில் நடைபெற்றது. இந்த வழித் தடத்தில் இயக்கப்பட்ட வந்தே பாரத் ரயில் மணிக்கு 180 கி.மீ.வேகத்தை எட்டியது. படுக்கை வசதி கொண்ட வந்தே பாரத் ரயில் எப்போது அறிமுகப்படுத்தப்பட உள்ளது என்பது குறித்த தகவலை ரயில்வே அதிகாரிகள் தெரிவிக்கவில்லை.

# இந்த கல்வியாண்டில் 60 லட்சம் இலவச பஸ் பாஸ்: போக்குவரத்து கழகம் சாதனை

சென்னை, ஜன.02-

தமிழகத்தில் 1 முதல் பிளஸ் 2 வரை மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்படுகிறது. இதன்மூலம் ஏழை எளிய மாணவர்கள் பயனடைகின்றனர். பஸ்பாஸ் விநியோக தாமதத்தை தவிர்க்க 2024- 25 கல்வியாண்டில் எமிஸ் தளத்தில் உள்ள மாணவர் தரவுகளை தொகுத்து 25 சதவீதம் கூடுதலாக இலவச பயண அட்டைகள் வழங்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, 2025- 26 நடப்பு கல்வி ஆண்டிலும் மாணவர் விபரங்கள் பெறப்பட்டு கட்டணமில்லா பேருந்து பயணஅட்டைகள் விரைந்து தயாரிக்கும் பணி போக்குவரத்து, பள்ளிக் கல்வித் துறை ஒருங்கிணைந்து செயல்படுத்தியது. இதன்படி நடப்பு கல்வியாண்டில் 60 லட்சம் மாணவர்களுக்கு பஸ்பாஸ் வழங்கி போக்குவரத்துத் துறை புதிய சாதனை படைத்துள்ளது.

# சென்னையில் விபத்துகள், குற்றங்கள் இல்லாத புத்தாண்டு தினம்: காவலர்களுக்கு ஆணையர் அருண் பாராட்டு



சென்னை, ஜன.02-

புத்தாண்டு தினத்தை ஒட்டி சென்னையில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு முன்னேற்பாடுகளால் விபத்து, உயிரிழப்பு, குற்றங்கள் இல்லாத புத்தாண்டு தினமாக அமைந்தது. இதற்காக அயராது பாடுபட்ட காவலர்களுக்கு சென்னை பெருநகர காவல் ஆணையர் அருண் பாராட்டு தெரிவித்தார்.

இது தொடர்பாக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: சென்னை பெருநகர காவல் ஆணையர் உத்தரவின் பேரில் காவல்துறையினரின் 2026 புத்தாண்டு தினத்தை ஒட்டி தகுந்த பாதுகாப்பு முன்னேற்பாடுகளினால் உயிரிழப்பு மற்றும் குற்றங்கள் நடவாத புத்தாண்டு தினமாக அமைந்துள்ளது.

2026ம் ஆண்டு புத்தாண்டு தினத்தையொட்டி புத்தாண்டு கொண்டாட்டம் எவ்வித அசம்பாவிதமும் நடக்காமலும், விபத்தில்லாமலும், பொதுமக்கள் பாதுகாப்பாகவும், மகிழ்ச்சியுடனும் கொண்டாடுவதற்கு சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ.அருண் உத்தரவின் பேரில், சென்னை பெருநகர காவல் கூடுதல் ஆணையாளர்கள், இணை ஆணையாளர்கள், துணை ஆணையாளர்கள் மேற்பார்வையில், உதவி ஆணையாளர்கள் தலைமையில், காவல் ஆய்வாளர்கள் உதவி ஆய்வாளர்கள் மற்றும் காவல் ஆளிநர்கள், போக்குவரத்து காவல் அதிகாரிகள், ஆளிநர்கள், ஆயுதப்படை, தமிழ்நாடு சிறப்பு காவல் படை (TSP) என மொத்தம் 19,000 காவல் அதிகாரிகள், ஆளிநர்கள் மற்றும் 1,500 ஊர்க்காவல் படையினர் பல்வேறு இடங்களில் வாகன தணிக்கைகள், போக்குவரத்து சீர் செய்தல், கூட்ட நெரிசலை தவிர்க்க ஒரு வழி பாதை அமைத்தும், விபத்தில்லாமல் கொண்டாடுவதற்காக மேம்பாலங்களில் இரவு நேரங்களில் மூடப்பட்டும், கடற்கரை பகுதிகளில் நீரில் பொதுமக்கள் இறங்காமல் இருக்க தடுப்புகள் அமைத்தும், காவல் உதவி மையங்கள், கூடாரங்கள் அமைக்கப்பட்டு போலீசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு பொதுமக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டது.

நேற்று (31.12.2025) சென்னை பெருநகர காவல், சட்டம் ஒழுங்கு, குற்றப்பிரிவு, போக்குவரத்து, ஆயுதப் படை மற்றும் சிறப்பு பிரிவுகளைச் சேர்ந்த காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் தீவிர கண்காணிப்பு மற்றும் அயராது மேற்கொண்ட சிறப்பான பணியால் 2026ம் புத்தாண்டு கொண்டாட்டம், சென்னை பெருநகரில், அமைதியாகவும், மகிழ்ச்சியுடனும், உயிர் இழப்புகள் இல்லாமலும், விபத்துகள் தவிர்க்கப்பட்டும், குற்றங்கள் மற்றும் அசம்பாவிதங்கள் நடவாமல் கொண்டாடப்பட்டதை பொதுமக்கள் வெகுவாக பாராட்டி வருகின்றனர்.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ.அருண், நேற்று (31.12.2025) சென்னை பெருநகரில் சிறப்பாக பணிகள் மேற்கொண்ட, காவல் அதிகாரிகள், ஆளிநர்கள் மற்றும் ஊர்க்காவல் படையினரை பாராட்டி, அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்தார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கரூர் உயிரிழப்பு சம்பவம் தொடர்பாக தவெக நிர்வாகிகளிடம் சிபிஐ விசாரணை நிறைவு



சென்னை, ஜன.02-

டெல்லி தலைமை அலுவலகத்தில் 3 நாட்களாக தவெக நிர்வாகிகளிடம் நடைபெற்று வந்த சிபிஐ விசாரணை நிறைவடைந்தது.

கரூர் உயிரிழப்பு சம்பவம் தொடர்பான விசாரணைக்காக தவெக பொதுச்செயலாளர் ஆனந்த், நிர்வாகிகள் ஆதவ் அர்ஜூனா, சிடிஆர் .நிர்மல்குமார், கரூர் மாவட்டச் செயலாளர் மதியழகன் ஆகியோர் டெல்லியில் சிபிஐ அலுவலகத்தில் 29ம் தேதி ஆஜராகினர். அவர்களிடம் தனித்தனியாக கரூர் சம்பவம் தொடர்பாக அடுக்கடுக்கான கேள்விகளை சிபிஐ அதிகாரிகள் எழுப்பினர். அவர்கள் அளித்த பதில்களை வீடியோவாகவும்எழுத்துப்பூர்வமாகவும் பதிவுசெய்து கொண்டனர். அந்தவகையில், தொடர்ந்து 3 நாட்களாக நடைபெற்று வந்தவிசாரணை நேற்று நிறைவடைந்தது. பின்னர் சிடிஆர்.நிர்மல்குமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது: எங்கள் தரப்பில் அனைத்து விதமான விளக்கங்களையும் கொடுத்திருக்கிறோம். தேவைப்படும் பட்சத்தில், மேலும் விளக்கங்களைக் கேட்டாலும், எப்போது வேண்டுமானாலும் விசாரணைக்கு ஒத்துழைக்க தயாராக இருக்கிறோம் என்பதை கூறியிருக்கிறோம்.

உள்ளே நடந்த விசாரணை சம்பந்தமாக பொது வெளியில் சொல்வது சரியாக இருக்காது. எங்கள் தரப்பில் என்னென்ன நியாயங்கள் இருக்கிறது, தமிழக அரசும் காவல் துறையும் எங்கு தவறு செய்தது என பல்வேறு விஷயங்களை தெரிவித்திருக்கிறோம்.

நிறைய வீடியோ ஆதாரங்களையும் வழங்கியுள்ளோம் விஜய்க்கு சம்மன் அனுப்பவாய்ப்பு என்பது போன்ற தவறான தகவல்கள் பரப்பப்படுகின்றன. எல்லாவற்றையும் சட்டப்பூர்வமாக எதிர்கொள்வோம்.

# தமிழக காவல் துறையில் 70 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம்

சென்னை, ஜன.02-

தமிழக காவல் துறையில் 70 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களில் 34 பேருக்கு பதவி உயர்வுடன் பணியிட மாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை உள்துறை செயலர் தீரஜ் குமார் பிறப்பித்தார்.

அதன்படி சிறைத் துறை கூடுதல் டிஜிபியாக இருந்த மகேஷ்வர் தயாள், சட்டம்ஒழுங்கு கூடுதல் டிஜிபியாக நியமிக்கப்பட்டுள்ளார். அங்கிருந்த டேவிட்சன் தேவாசீர்வாதம் பதவி உயர்வு பெற்று ஆயுதப்படை டிஜிபியாக நியமிக்கப்பட்டுள்ளார். இதேபோல் சைபர் குற்றப்பிரிவு கூடுதல் டிஜிபி சந்தீப் மித்தல், பொருளாதார குற்றப்பிரிவு பாலநாக தேவி ஆகியோர் பதவி உயர்வு அளிக்கப்பட்டு அதே பிரிவுகளில் டிஜிபியாக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இதேபோல் தென் மண்டல ஐஜியாக இருந்த பிரேம் ஆனந்த் சின்ஹா கூடுதல் டிஜிபியாக பதவி உயர்வு பெற்று ஆவடி காவல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார். அங்கிருந்த சங்கர் சிறைத் துறை கூடுதல் டிஜிபியாக நியமிக்கப்பட்டுள்ளார். தென் மண்டல ஐஜியாக சென்னை தலைமையிட கூடுதல் காவல் ஆணையர் விஜயேந்திர பிதாரி நியமிக்கப்பட்டுள்ளார். இதேபோல், தென் சென்னை கூடுதல் காவல் ஆணையராக இருந்த கண்ணன், கோவை காவல் ஆணையராக பணியமர்த்தப்பட்டுள்ளார். இவர்கள் உட்பட 70 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் ஓரிரு நாட்களில் புதிய இடங்களில் பணியை மேற்கொள்வார்கள் என தெரிவிக்கப்பட்டது.

# சென்னை 2ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம்: அயனாவரம் பெரம்பூர் சுரங்கப் பணி நிறைவு

சென்னை, ஜன.02-

இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் 3வது வழித்தடத்தில் ஒரு பகுதியாக, அயனாவரம் பெரம்பூர் வரை 861 மீட்டர் தொலைவிலான சுரங்கப்பாதை பணி வெற்றிகரமாக நிறைவடைந்தது.

சென்னையில் 3 வழித்தடங்களில் 116.1 கி.மீ. தொலைவுக்கு மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இவற்றில் மாதவரம் சிறுசேரி சிப்காட் வழித்தடமும் (45.4 கி.மீ.) ஒன்று. மாதவரம் பால்பண்ணை பகுதியில் இந்த சுரங்கப்பாதை பணி முதன்முதலாகத் தொடங்கியது.

இதன் ஒருபகுதியாக, அயனாவரம் நிலையத்தில் இருந்து பெரம்பூர் நிலையம் வரையிலான 861 கி.மீ. தொலைவுக்கு கீழ்பாதையில் சுரங்கப்பாதை அமைக்கும் பணி விறுவிறுப்பாக நடைபெற்று வந்தது. இதற்காக, 'மேலகிரி' என்ற சுரங்கம் தோண்டும் இயந்திரம் பயன்படுத்தப்பட்டது.

இந்நிலையில், இப்பணி நேற்று முன்தினம் முடிவடைந்து, 'மேலகிரி' இயந்திரம் பெரம்பூரை வெற்றிகரமாக வந்தடைந்தது. இந்த நிகழ்வை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள், டாடா ப்ராஜெக்ட்ஸ் நிறுவன அதிகாரிகள் உற்காகமாகக் கொண்டாடினர்.

இதுகுறித்து, சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் இதுவரை 19 சுரங்கம் தோண்டும் பணிகள் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளன. சுரங்கம் தோண்டும் இயந்திரமான 'மேலகிரி', பெரம்பூர் ரயில் நிலைய தண்டவாளங்கள் மற்றும் நடைமேடைக்கு அடியிலும், அதிக மக்கள் தொகை கொண்ட மற்றும் நெருக்கமான கட்டிடங்கள் நிறைந்த பகுதிகளுக்கு அடியிலும் சுரங்கப்பாதை அமைக்கும் பணியை வெற்றிகரமாக முடித்துள்ளது.

இந்த வழித்தடத்தில் இருந்த 32க்கும் மேற்பட்ட ஆழ்துளைக்கிணறுகள் முறையாகக் கையாளப்பட்டன. பொதுமக்களுக்கு எந்தவித இடையூறும் ஏற்படாத வகையில், அக்கிணறுகளுக்கு பதிலாக மாற்றுநீர் ஆதாரங்கள் மெட்ரோ நிர்வாகத்தால் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# தமிழகத்தில் 2.23 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்புக்கு ரூ.249 கோடி

சென்னை, ஜன.02-

தமிழகத்தில் உள்ள 2.23 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பாக அரிசி, சர்க்கரை, முழு நீள கரும்பு வழங்க ரூ.248.66 கோடி நிதி ஒதுக்கி தமிழக அரசு அரசாணை பிறப்பித்துள்ளது. மேலும் பொங்கல் ரொக்கப்பரிசு தொடர்பாக விரைவில் அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, ஆண்டுதோறும் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பாக தலா ஒரு கிலோ பச்சரிசி, சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு வழங்கப்பட்டு வருகிறது. இந்தாண்டு சட்டப்பேரவைத் தேர்தல் வருவதால் ரொக்கப்பரிசு வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.இதற்கிடையில், பொங்கல் பரிசை ரூ.5 ஆயிரமாக தர வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

பெரும் எதிர்பார்ப்பு உள்ளதால், ரொக்கத் தொகை தொடர்பான ஆலோசனைகள் அரசு தரப்பில் நடைபெற்றாலும், முழு வடிவம் பெறவில்லை. இதுகுறித்து, ஜன.6ம் தேதி நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்படலாம் எனத் தெரிகிறது. இந்நிலையில், தமிழகத்தில் உள்ள அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர் என 2 கோடியே 22 லட்சத்து 91,710 குடும்ப அட்டைகளுக்கு தலா ஒரு கிலோ அரிசி, சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக் கரும்பு ஆகியவற்றை பரிசுத் தொகுப்பாக வநியோகிக்க ரூ.248 கோடியே 66 லட்சத்து 17,959 கோடி செலவு ஏற்படும் என கணிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்வதற்கான அரசாணையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

அந்த அரசாணையில், ஒரு கிலோ அரிசி ரூ.25க்கும், சர்க்கரை ரூ.48.55க்கும், ஒரு கரும்பு தோராயமாக ரூ.38க்கும் கொள்முதல் செய்யும் வகையில் உத்தரவிடப்பட்டுள்ளது. இதுதவிர பொங்கல் தொகுப்புக்கான டோக்கன் விநியோகம் குறித்து கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அறிவுறுத்தல்களை வெளியிட்டுள்ளார்.

மண்டலங்களில் செயல்படும் நியாயவிலைக் கடைகளுடன் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளுக்கு ஏற்ப ஜன.2ம் தேதிக்குள் டோக்கன்கள் அச்சிடப்பட்டு விநியோகத்துக்கு தயார் நிலையில் வைக்க வேண்டும். குடும்ப அட்டைதாரர்களுக்கு சுழற்சி முறையில் பொங்கல் தொகுப்பு வழங்க ஏதுவாக குடும்ப அட்டைகள், பிரிக்கப்பட்டு தெருவாரியாக பராமரிக்கப்பட வேண்டும். அதன் அடிப்படையில் பரிசுத்தொகுப்பு பெற வேண்டிய நாள், நேரம் குறிப்பிட்டு டோக்கன்களை விற்பனையாளர்கள் குடும்ப அட்டைதாரர்களின் வீடுகளில் வழங்க வேண்டும்.

இந்த டோக்கன்களை எக்காரணம் கொண்டும் நியாயவிலைக் கடையை சாராத வேறு நபர்கள் அரசியல் சார்ந்த நபர்களை கெண்டு விநியோகிக்கக் கூடாது என்பது உள்ளிட்ட பல்வேறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிலையில், தமிழகத்தில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் குடும்ப அட்டைகளுக்கு வழங்க வேண்டிய வேட்டி, சேலை உள்ளிட்ட தொகுப்பு பொருட்கள் அனைத்தும் அனுப்பப்பட்டு தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# குர்ஆன் சாட்சியாக பதவிப்பிரமாணம் செய்துகொண்ட நியூயார்க் நகர மேயர் ஜோரான் மம்தானி



நியூயார்க், ஜன.02-

அமெரிக்க வரலாற்றில் முதன்முறையாக இஸ்லாமியர் ஒருவர் நியூயார்க் நகர மேயரானார் என்ற வரலாறு படைத்த ஜோரான் மம்தானி, இன்று குர்ஆன் சாட்சியாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டு சரித்திரத்தில் இன்னொரு புதிய பக்கத்தை சேர்த்துள்ளார்.

யார் இந்த ஜோரான் மம்தானி? நீங்கள் ‘சலாம் பாம்பே’, ‘மான்சூன் வெட்டிங்’ போன்ற திரைப்படங்கள், ‘ஸோ ஃபார் ஃப்ரம் இந்தியா’ போன்ற ஆவணப்படம் பற்றி அறிந்திருந்திருந்தால், அதனை இயக்கிய மீரா நாயரையும் தெரிந்திருக்கும். அந்த பிரபல இயக்குநர் மீரா நாயர் மற்றும் உகாண்டாவைச் சேர்ந்த மஹமூத் மம்தானியின் மகன் தான் இந்த ஜோரான் மம்தானி.

34 வயதான ஜோரான் மம்தானி ஒரு சட்ட வல்லுநர். அவர் தனது தேர்தல் பிரச்சாரங்களில், “அமெரிக்க அரசியலில் மாற்றம் தேவை. இது மக்களுக்கான, அவர்களின் தேவைகளுக்கான அரசியலாக இருக்க வேண்டுமே தவிர உயரடுக்கு மக்களுக்கானதாக இருக்கக் கூடாது” என்று கூறி கவனம் ஈர்த்திருந்தார்.

அவரது பிரச்சாரங்களுக்கு ஆதரவு பெருக அந்த ஆதரவு அலைகளோடு நியூயார்க் மேயர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட்ட மம்தானி, 20 லட்சம் வாக்குகளுக்கும் மேல் பெற்று அபார வெற்றிச் சரித்திரத்தை பதிவு செய்தார். தொடர்ந்து அவர் ஜனவரி 1ம் தேதி நியூயார்க் மேயராக பதவியேற்பார் என்று அறிவிக்கப்பட்டது.

பதவியேற்பிலும் கவனம் ஈர்த்த மம்தானி: அதன்படி அவர் பதவியேற்றுக் கொண்டார். பிரச்சாரங்களில் , வெற்றி உரைகளில் மட்டுமல்லாது பதவியேற்பில் புதுமை செய்துள்ளார் மம்தானி. அவரது பதவியேற்பு விழா இரண்டு கட்டங்களாக திட்டமிடப்பட்டது. அதன்படி, நள்ளிரவு தனிப்பட்ட விழாவில், தனது தாத்தாவின் குர்ஆன் மற்றும் புகழ்பெற்ற கருப்பின எழுத்தாளர் ஆர்டுரோ ஸ்காம்பர்க் வைத்திருந்த குர்ஆன் சாட்சியாக பதவியேற்றார். இந்தப் பதவியேற்பு நிகழ்ச்சி மான்ஹாட்டன் நகரின் கைவிடப்பட்ட ஒரு ரயில் நிலையத்தின் சுரங்கப்பாதை முன்னர் நடைபெற்றது.

பின்னர் ஒரு சிற்றுரை ஆற்றிய மம்தானி, “இது என் வாழ்நாளுக்கான கவுரவமும், உரிமையாகும் ஆகும்.” என்றார்.

மேலும், மான்ஹாட்டன் சப்வே பற்றி அவர் கூறுகையில், “இது நமது நகரத்தின் உயிர்ப்பு, சுகாதாரம் மற்றும் பாரம்பரியத்துக்கு பொது போக்குவரத்தின் முக்கியத்துவத்துக்கான ஒரு சான்றாக திகழ்கிறது.” என்றார்.

தொடர்ந்து, மக்கள் பங்கேற்கும் பெரிய விழா நகர மன்றம் முன்பு நடைபெற உள்ளது. அந்தப் பதவி பிரமாணத்தை அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் பெர்னி சாண்டர்ஸ் செய்துவைக்கிறார்.

மம்தானி அமெரிக்க நகர மேயர்களில் முதல் தெற்காசிய, ஆப்பிரிக்க வம்சாவளியைச் சேர்ந்தவர். நியூயார்க்கின் முதல் முஸ்லிம் மேயர். அமெரிக்க அரசியலில் கூர்ந்து கவனிக்கப்படும் ஓர் அரசியல்வாதியாக இருக்கிறார்.

# திமுகவை வீழ்த்தவே பாஜகவுடன் கூட்டணி என்பதை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்: இபிஎஸ் அறிவுரை



சென்னை, ஜன.02-

எஸ்ஐஆர் பணியில், அதிமுகவினர் ஒருவர் பெயரும் விடுபடாத வகையில் மாவட்ட செயலாளர்கள் பணியாற்ற வேண்டும் என்று பொதுச் செயலாளர் பழனிசாமி அறிவுறுத் தியுள்ளார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தல் இன்னும் 2 மாதங்களில் அறிவிக்கப்பட உள்ளது. எஸ்ஐஆர் பணிகளையும் தேர்தல் ஆணையம் தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. அதில், படிவங்களை முறையாக பூர்த்தி செய்யாமல் அளித்த 12 லட்சம் பேரிடம் தேர்தல் ஆணையம் விசாரணை நடத்தி வருகிறது. இந்த பரபரப்பான சூழலில் அதிமுக மாவட்ட செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், பொதுச்செயலாளர் பழனிசாமி தலை மையில், சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பழனிசாமி பங்கேற்று, மாவட்ட வாரியாக நடைபெற்று வரும் கட்சி வளர்ச்சிப் பணிகள் குறித்து நிர்வாகி களிடம் கேட்டறிந்தார். பின்னர் கூட்டத்தில் அவர் பேசியதாவது: சட்டப்பேரவை தேர்தல் அறிவிப்புக்கு இன்னும் 2 மாதங்களே உள்ள நிலையில், கட்சியினர் அனைவரும் தீவிர களப்பணியாற்ற வேண்டும். எஸ்ஐஆர் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணியில் அதிமுகவினர் சிறப்பாக செயல்படவில்லை என தகவல்கள் வருகின்றன. வாக்குச்சாவடி அளவில் நிர்வாகிகள் தீவிர பணியாற்றுவதை மாவட்ட செயலாளர்கள் உறுதி செய்ய வேண்டும்.

தமிழகம் முழுவதும் நிரந்தரமாக குடியேறியதாக வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட 66 லட்சம் பேரை மீண்டும் வாக்காளர் பட்டியலில் சேர்க்க, வாக்குச்சாவடி முகவர்கள், பாக கிளை நிர்வாகிகள் அனைவரும் முனைப்புடன் செயல்பட வேண்டும். அதிமுகவினர் ஒருவர் பெயரும் விட்டுவிடாமல் வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும்.

இறந்தவர்கள் உள்ளிட்டோரை மீண்டும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க திமுகவினர் முயலக்கூடும். அதை அதிமுகவினர் தடுக்க வேண்டும். முறையாக படிவங்களை பூர்த்தி செய்யாத 12 லட்சம் பேரிடம் விளக்கம் கேட்டுநோட்டீஸ் அனுப்பியுள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதில் பொதுமக்கள், அதிமுகவினர் ஒருவரின் பெயரும் நிராகரிக்காமல், அவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் நீடிக்க, தேவையான ஆதாரங்களை எடுத்து தந்து உதவ வேண்டும். வரும் ஜன.3, 4 தேதிகளில் வாக்காளர் பட்டியல் திருத்த சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன. அதை ஆக்கப்பூர்வமாக அதிமுகவினர் பயன்படுத்திக்கொள்வதை உறுதி செய்ய வேண்டும்.

ஐடி விங் நிர்வாகிகளின் பணி திருப்திகரமாக இல்லை. பிற கட்சிகளின் வேகத்தை மிஞ்சும் வகையில் அதிமுகவின் செயல்பாடுகள் மக்களை சென்றடைய வேண்டும். 2026 தேர்தலில் அதிமுக கூட்டணி வெற்றிக்கு இந்த விங் முக்கிய பங்காற்ற வேண்டும். திமுகவில் நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி முகவர்களை விட, அதிமுக முகவர்கள் குறைவாக உள்ளனர். திமுகவை விட அதிக முகவர்களை விரைவாக நியமிக்க வேண்டும். தொகுதி மக்களுடன் அனைவரும் தொடர்பில் இருக்க வேண்டும். தேர்தல் கூட்டணி முடிவுகள் விரைவில் எடுக்கப்படும். சில கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. அதை நான் பார்த்துக்கொள்கிறேன். தொகுதியில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

அதிமுக பாஜக கூட்டணி குறித்து கிராமப்புறங்களில் எதிர்மறை கருத்துகள் உள்ளன. பொது எதிரியை வீழ்த்துவதற்கான கூட்டணி இது என்பதை மக்களை சந்தித்து விளக்க வேண்டும். அதிமுக அரசின் 10 ஆண்டு சாதனைகள், எம்ஜிஆர், ஜெயலலிதா செயல்படுத்திய முத்தான திட்டங்களை மக்களிடம் எடுத்துச் சொல்லி, அத்திட்டங்கள் மூலம் அவர்கள் பயன்பெற்றிருப்பதை கூறி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு மாவட்ட செயலாளரும் தங்களது மாவட்டத்தில் உள்ள தொகுதிகளின் வேட்பாளர்களை தேர்ந்தெடுக்க, ஒவ்வொரு தொகுதிக்கும் தலா 6 பேர் கொண்ட பட்டியலை தலைமைக்கு பரிந்துரைக்க வேண்டும்.

மாவட்ட செயலாளர்களின் பரிந்துரை, மாவட்ட பொறுப்பாளர்களின் பரிந்துரை, தொகுதியில் வேட்பாளரின் செல்வாக்கு உள்ளிட்ட அம்சங்களை ஆராய்ந்து வேட்பாளர்கள் அறிவிக்கப்படுவார்கள். நமக்கு வெற்றி வாய்ப்புள்ள தொகுதிகள் சிலவற்றை கூட்டணி கட்சிகளுக்கு கொடுக்க வேண்டி இருக்கும். அதை ஏற்றுக்கொண்டு, கூட்டணி வெற்றிக்கு மாவட்ட செயலாளர்கள் பாடுபட வேண்டும். இவ்வாறு அவர் பேசியதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் துணை பொதுச் செயலாளர்கள் கே.பி.முனுசாமி, நத்தம் விஸ்வநாதன், தலைமை நிலைய செயலாளர் எஸ்.பி.வேலுமணி, பொருளாளர் திண்டுக்கல் சீனிவாசன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். கூட்டத்தின் முடிவில், திருவள்ளூர் மாவட்டத்தை சேர்ந்த மக்கள் நீதி மய்யம் மற்றும் ஓபிஎஸ் அணியை சேர்ந்த நிர்வாகிகள், பழனிசாமி முன்னிலையில் அதிமுகவில் இணைந்தனர்.




# 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு சிலிண்டர் விலை ரூ.110 உயர்வு.! ரூ.1849க்கு விற்பனை

சென்னை, ஜன.02-

19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு சிலிண்டர் விலை ரூ.110 உயர்ந்துள்ளது. கடந்த 2 மாதங்களாக வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டரின் விலை குறைந்த நிலையில் இந்த மாதம் உயர்ந்துள்ளது. பாரத், இந்துஸ்தான், இந்தியன் ஆயில் ஆகிய பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் வீடுகளுக்கு 14.20 கிலோ எடையிலும், வணிக பயன்பாட்டுக்கு 19 கிலோ எடையிலும், சமையல் கேஸ் சிலிண்டர்களை நாடு முழுவதும் வினியோகம் செய்து வருகின்றன. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை மற்றும் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் கேஸ் சிலிண்டர்களின் விலைகளை நிர்ணயித்து வருகின்றன.

இதில் சமையல் கேஸ் சிலிண்டர்களின் விலைகளை மாதத்தின் முதல் தேதியில் மாற்றி அமைத்து வருகிறது. அந்த வகையில் இன்று எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, சென்னையில் வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டரின் விலை உயர்ந்துள்ளது. கடந்த 2 மாதங்களாக விலை குறைந்த நிலையில் இந்த மாதம் உயர்ந்துள்ளது. அதன்படி, சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை ரூ.110 உயர்ந்து, ரூ.1,849.50க்கு விற்பனை செய்யப்படுகிறது. 14 கிலோ எடை கொண்ட வீட்டு உபயோக சிலிண்டர் விலை மாற்றமின்றி ரூ.868.50 காசுகள் என்ற நிலையில் நீடிக்கிறது.

# போலி ஆவணங்கள் மூலம் சிங்கப்பூரை சேர்ந்த மூதாட்டியின் ரூ.800 கோடி சொத்துகள் மோசடி



தஞ்சாவூர், ஜன.02-

சிங்கப்பூரைச் சேர்ந்த மூதாட்டியின் சொத்துகளை, போலி ஆவணங்கள் மூலம் மோசடி செய்த, தஞ்சாவூரைச் சேர்ந்த அதிமுக நிர்வாகி உட்பட 12 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சிங்கப்பூரைச் சேர்ந்தவர் ஷேக் சிராஜுதீன். இவரது மனைவி முகமதா பேகம் (76). தொழிலதிபரான ஷேக் சிராஜுதீனுக்கு தஞ்சாவூர் நாஞ்சிக்கோட்டை, சிராஜ்பூர் நகர், செங்கிப்பட்டி ஆகிய பகுதிகளில் ஏராளமான சொத்துகள் உள்ளன. 2015ல் ஷேக் சிராஜுதீன் உயிரிழந்த நிலையில், அவரது சொத்துகளை தஞ்சாவூரைச் சேர்ந்த வித்யா சுமதி கவனித்து வந்துள்ளார்.

ஜெயலலிதா பேரவை தலைவர்: பின்னர், வித்யா சுமதி தனக்கு அறிமுகமான, தஞ்சாவூரைச் சேர்ந்த அதிமுக ஜெயலலிதா பேரவை மத்திய மாவட்டத் தலைவரான கேபிள் செந்தில் என்கிற செந்தில் குமார் உள்ளிட்டோருடன் சேர்ந்து 2017 முதல் 2022 வரை போலி ஆவணங்களை தயாரித்து, முகமதா பேகத்திடம் கையெழுத்து பெற்றுள்ளனர்.

போலி ஆவணங்கள்ஞ் தொடர்ந்து, செங்கிப்பட்டி, சிராஜ்பூர் பகுதியில் உள்ள பெட்ரோல் பங்க் இடத்தை செந்தில்குமார் தனது உறவினரான ரேவதி, மணிகண்டன், ஆதித்யா, கவிதா, சுஜாதா ஆகியோருக்கு விற்பனை செய்துள்ளார்.

மேலும், சென்னை ஆழ்வார்பேட்டை, தஞ்சாவூர் நாஞ்சிக்கோட்டை ஆகிய பகுதிகளில் சிராஜுதீனுக்கு சொந்தமான இடத்தை தானமாக வழங்கிவிட்டதாக போலி ஆவணங்கள் மூலம் அபகரித்துள்ளனர். மூன்று வங்கிகளில் முகமதா பேகம் பெயரில் கணக்குத் தொடங்கி பரிவர்த்தனை செய்துள்ளனர்.

அண்மையில் சிராஜுதீன் வீட்டை உடைத்து, அங்கிருந்த ஆவணங்கள், 4 இருசக்கர மற்றும் 2 நான்கு சக்கர வாகனங்கள், தங்க நகைகள் ஆகியவற்றை திருடியதாகவும் கூறப்படுகிறது. இதுகுறித்து செந்தில்குமார் உள்ளிட்டோரிடம் முகமதா பேகம் கேட்டபோது, அவருக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளனர்.

இதையடுத்து, போலி ஆவணங்கள் மூலம் ரூ.800 கோடி மதிப்பிலான சொத்துகளை அபகரித்துவிட்டதாக தஞ்சாவூர் குற்றப் பிரிவு போலீஸில் டிச. 27ம் தேதி முகமதா பேகம் புகார் அளித்தார்.

அதன்பேரில், வித்யா சுமதி, செந்தில்குமார், பிரகாஷ், ரேவதி, பாஸ்கரன், நாகராஜன், பெட்ரிஷியா ஜோனி, செல்லப்பன், மணிகண்டன், ஆதித்யா, கவிதா, சுஜாதா ஆகிய 12 பேர் மீது 9 பிரிவுகளில் போலீஸார் வழக்குப் பதிவு செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர்.


# வாரம் ஒரு மத்திய அமைச்சர்... ரங்கசாமி வீட்டுக்கு தூது அனுப்பும் பாஜக

புதுச்சேரி, ஜன.02-

புதுச்சேரியில் மீண்டும் ரங்கசாமி தலைமையில் கூட்டணி ஆட்சியை அமைக்க பாஜக பகீரதப் பிரயத்தனம் செய்கிறது. ஆனால், இத்தனை நாளும் தனது கோரிக்கைகளை எல்லாம் கேட்டும் கேட்காதது போல் இருந்த பாஜகவை இதுதான் சமயம் என்று சுற்றலில் விட்டுக் கொண்டிருக்கிறார் ரங்கசாமி. விளைவு, மத்திய அமைச்சர்கள் ஒருவர் மாற்றி ஒருவராக புதுச்சேரிக்கு வந்து ரங்கசாமியின் மனதைக் கரைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தேர்தலில், இப்போதுள்ள கூட்டணியே தொடருமா அல்லது இன்னொரு கூட்டணியில் அங்கம் வகிப்பீர்களா என்று கேட்பவர்களுக்கு எல்லாம் “கூட்டணி பற்றி தேர்தல் நெருங்கும் போது பேசலாம்” எனச் சொல்லி வரும் முதல்வர் ரங்கசாமி, பாஜக தரப்புக்கும் இதே பதிலைச் சொல்லிவிட்டார். இந்த நிலையில், புதுச்சேரி மாநில பாஜக தேர்தல் பொறுப்பாளராக அறிவிக்கப்பட்ட மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா, கடந்த மாதம் நேரில் வந்து ரங்கசாமியை சந்தித்துப் பேசினார். அப்போது ரங்கசாமி சில கோரிக்கைகளை முன்வைத்ததாகவும் அவற்றை பாஜக தலைமையின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாக மத்திய அமைச்சர் சொன்னதாகவும் தகவல் பரவியது.

இதையடுத்து, பாஜக தேசிய செயல் தலைவராக நியமிக்கப்பட்ட நிதின் நபின் முதல் வேலையாக புதுச்சேரிக்குப் புறப்பட்டு வந்தார். தனது இல்லம் தேடி வந்து சந்தித்துப் பேசிய நிதின் நபினை அப்பா பைத்தியம் சாமி கோயிலுக்கு அழைத்துச் சென்று பூஜை செய்து எலுமிச்சை பிரசாதம் தந்து ஆசி வழங்கினார் ரங்கசாமி. நிதினைத் தொடர்ந்து ரங்கசாமியைத் தேடி வந்து சந்தித்த மத்திய உள்துறை இணையமைச்சர் நித்தியானந்த்ராயும் அப்பா பைத்தியம் சாமி கோயிலில் வழிபாடு நடத்தி ரங்கசாமி காலில் விழுந்து வணங்கி எலுமிச்சை பிரசாதத்தைப் பெற்றதுடன் அங்கேயே அன்னதான மண்டபத்தில் உணவும் சாப்பிட்டுச் சென்றார்.



இவர்களைத் தொடர்ந்து குடியரசு துணைத்தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணனும் புதுச்சேரிக்கு வந்து ரங்கசாமியை சந்தித்துப் பேசினார். அவரிடம் சகஜமாகப் பேசிய ரங்கசாமி, புதுச்சேரியின் கவனிக்கப்படாத கோரிக்கைகளை பட்டியலிட்டார். அதற்கு, “புதுச்சேரிக்கான மகத்தான திட்டங்கள் பிரதமர் வருகையின் போது செயல்வடிவம் பெறும்” என உத்தரவாதம் அளித்துச் சென்றார் ராதாகிருஷ்ணன்.

இத்தனை சந்திப்புகள் நடந்த பிறகும் மனதில் உள்ளதை இன்னும் வெளிப்படையாகப் பேசியபாடில்லை ரங்கசாமி. இதுபற்றி என்டிஏ வட்டாரங்களில் விசாரித்த போது, “பிஹாரில் தங்களை விட குறைவான எண்ணிக்கையில் எம்எல்ஏக்களை வைத்திருக்கும் நிதிஷ் குமாரை கடந்த முறையும் இப்போதும் முதல்வராக அங்கீகரித்திருக்கிறது பாஜக. மகாராஷ்டிராவிலும் ஆட்சி மாற்றம் ஏற்படக் காரணமாக இருந்த ஷிண்டேவை முதல்வர் பதவியில் அமர்த்தி ஆதரவளித்தது.

அதன்படியே, இந்த முறையும் புதுச்சேரியில் என்.ஆர்.காங்கிரஸ் பாஜக கூட்டணி வெற்றிபெற்றால் ரங்கசாமி தான் முதல்வர் என்பதில் உறுதியாக இருக்கிறது பாஜக. தனி மெஜாரிட்டியுடன் ஆட்சி அமைத்தால் கூட யூனியன் பிரதேசமான புதுச்சேரியில் மத்திய அரசின் தயவின்றி ஆட்சி நடத்துவது கடினம். மத்தியில் 2029 வரை பாஜக ஆட்சி நிச்சயம் என்பதால், பாஜக ஆதரவில்லாமல் ரங்கசாமியால் எதையும் சாதிக்க முடியாது. இது அவருக்கும் தெரியும் என்றாலும் அதை அவரது வாயால் சொல்ல வைப்பதற்காகவே மத்திய அமைச்சர்கள் மாறி மாறி புதுச்சேரிக்கு படையெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்” என்றனர்.



# அலங்காநல்லூர் காளியம்மன் கோவில் பொங்கல் விழா

அலங்காநல்லூர், ஜன.02-

மதுரைமாவட்டம் அலங்காநல்லூரில் காளியம்மன் கோவில் பொங்கல் விழா நடந்தது. இரண்டு நாட்கள் நடந்த இந்த விழாவில் நேற்று இரவு அம்மன் கரகம் அலங்கரித்து வாணவேடிக்கையுடன் மேளதாளம், முழங்க ஊர்வலமாக கோவிலுக்கு எடுத்து வரப்பட்டது. பின் பொங்கல் வைத்து சக்தி கிடாய் வெட்டி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனைகள் நடந்தன. தொடர்ந்து இன்று காலை ஏராளமான பக்தர்கள் அக்கினிசட்டி, பால்குடம், அலகு குத்துதல், மாவிளக்கு எடுத்தல், கரும்பு தொட்டில், உள்ளிட்ட நேர்த்திக்கடன்கள் செலுத்தி தரிசனம் செய்தனர். பின்னர் அம்மனுக்கு கூழ்காய்ச்சி பக்தர்களுக்கு வழங்கப்பட்டது. இதில் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார். உடன் திமுக ஒன்றிய செயலாளர் தன்ராஜ், நகர செயலாளர் ரகுபதி, அறங்காவலர் குழு தலைவர் அமுல்ராணி, செயல் அலுவலர் சூரியன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். அன்று மாலை மேளதாளம் முழங்க அம்மன் கரகம் ஆற்றில் கரைக்கப்பட்டது. திருவிழா ஏற்பாடுகளை கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.

# சிகரெட், புகையிலைப் பொருட்களுக்கு கூடுதல் கலால் வரி பிப்.1 முதல் அமல்

புதுடெல்லி, ஜன.02-

சிகரெட்டுகள் மற்றும் புகையிலைப் பொருட்களுக்கான கூடுதல் கலால் வரி பிப்ரவரி 1ம் தேதி முதல் அமலுக்கு வர உள்ளது. அதன்படி, சிகரெட் மற்றும் புகையிலை பொருட்களுக்கு தற்போது விதிக்கப்படும் 40% ஜிஎஸ்டி வரியுடன் சேர்த்து இந்த கலால் வரி கூடுதலாக வசூலிக்கப்படும். இதனால் இவற்றின் விலை பலமடங்கு உயரும் எனத் தெரிகிறது.



இது தொடர்பாக மத்திய அரசு வெளியிட்டுள்ள அரசாணையில், ‘‘சிகரெட்டுகள் மற்றும் புகையிலைப் பொருட்களுக்கான கூடுதல் கலால் வரி பிப்ரவரி 1ம் தேதி முதல் அமல்படுத்தப்படும். சிகரெட்டுகளின் நீளம் மற்றும் வகையைப் பொறுத்து 1,000 சிகரெட்குச்சிகளுக்கு ரூ.2,050 முதல் ரூ.8,500 வரை கூடுதல் கலால் வரியை அரசாங்கம் விதித்துள்ளது. சிகரெட் மற்றும் புகையிலை பொருட்களுக்கு தற்போது விதிக்கப்படும் 40% ஜிஎஸ்டி வரியுடன் சேர்த்து இந்த கலால் வரி கூடுதலாக வசூலிக்கப்படும்’’ என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கலால் (திருத்த) மசோதா 2025, நடந்து முடிந்த நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்டது. அப்போது நாடாளும ன்றத்தில் பேசிய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், ‘‘ஜிஎஸ்டி இழப்பீட்டு செஸ் காலாவதியான பிறகு, புகையிலை மற்றும் அது தொடர்பான பொருட்கள் மீதான கலால் வரிகளை திருத்தும் (உயர்த்தும்) நோக்கில் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. வசூலிக்கப்படும் வருவாய், பகிரக்கூடிய நிதிக்குச் செல்லும் என்றும், பின்னர் அது மாநிலங்களுக்கு 41% மறுபகிர்வு செய்யப்படும்.

பல நாடுகள் புகையிலை வரிகளை ஆண்டுதோறும் திருத்தி அமைக்கின்றன. பல நாடுகள் அதை பணவீக்கத்துடன் இணைக்கின்றன. இந்தியாவி லும்கூட ஜிஎஸ்டிக்கு முன்பும் புகையி லைப் பொருட்கள் மீதான வரி ஆண்டுதோறும் உயர்த்தப்பட்டது. இதன் நோக்கம், மக்கள் புகையிலைப் பொருட்களைப் பயன்படுத்தும் பழக்கத்துக்கு அடிமையாகாமல் இருக்க வேண்டும் என்பதே.

ஜிஎஸ்டிக்கு முன்பு இருந்த கலால் வரியை அரசாங்கம் மீண்டும் கொண்டு வருகிறது. அரசாங்கம் எடுத்த பல்வேறு முயற்சிகள் காரணமாக 2018 முதல் 2022 வரையிலான காலகட்டத்தில் 1.12 லட்சம் ஏக்கருக்கும் அதிகமான புகையிலை சாகுபடி நிலங்கள் மற்ற பயிர்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. அந்த நிலங்களில், கரும்பு, நிலக்கடலை, எண்ணெய் பனை, பருத்தி, மிளகாய், மக்காச்சோளம், வெங்காயம், பயிறு வகைகள், மஞ்சள் போன்றவை பயிரிடப்படுகின்றன’’ என்று தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அறங்காவலர்களாக பிடிஆர் தாயார் உள்பட பழைய உறுப்பினர்களே மீண்டும் நியமனம்

மதுரை, ஜன.02-

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அறங்காவலர் பதவிக்கு திமுகவினர் பலர் தீவிரமாக முயற்சித்தனர். இதில், அமைச்சரின் தாயார் உள்ளிட்ட பழைய உறுப்பினர்களையே மீண்டும் அறங்காவலர்களாக நியமித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.



உலகப் புகழ் பெற்ற மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் தக்காராக கருமுத்து தி.கண்ணன், 18 ஆண்டுகள் பதவி வகித்தார். இவர் 2023 மே 23ம் தேதி காலமானார். அதனையடுத்து கோயில் தக்காராக இந்துசமய அறநிலையத் துறை மண்டல இணை ஆணையர் நியமிக்கப்பட்டார்.

இதனிடையே, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலை யங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் க.மணிவாசன், 2023 நவ.6ம் தேதி 5 பேரை அறங்காவலர் குழு உறுப்பினர்களாக நியமித்தார். இதில் அமைச்சர் பழனிவேல் தியாராஜன் தாயார் ருக்மணி பழனிவேல்ராஜன், மதுரை காந்தி நகரைச் சேர்ந்த முன்னாள் மாநகராட்சி கவுன்சிலர் டி.சுப்புலெட்சுமி, அண்ணாநகர் தொழிலதிபர் பி.கே.எம்.செல்லையா, கே.கே.நகர் தனியார் மருத்துவமனை நிர்வாக இயக்குநர் மு.சீனிவாசன், உயர் நீதிமன்ற அரசு குற்றவியல் வழக்கறிஞர் ஆர்.எம்.அன்புநிதியின் மனைவி எஸ்.மீனா ஆகிய 5 பேர் நியமிக்கப்பட்டனர்.

2023 டிச.1 ல் அறங்காவலர் உறுப்பினராக பதவியேற்றனர். பின்னர் அறங்காவலர் குழுத் தலைவராக 2023 டிச.22ல் பதவியேற்றார். பதவியேற்ற நாளிலிருந்து 2 ஆண்டுகள் பதவி காலாவதியாகும்.

இதனிடையே மீனாட்சி அம்மன் கோயில் கும்பாபிஷேகத்துக்காக பணிகள் முழு வீச்சில் நடந்துவருகின்றன. இதில் தீ விபத்தில் சேதமான வீரவசந் தராயர் மண்டபப் பணிகளும் மும்முரமாக நடந்து வருகின்றன. இந்நிலையில், அறங்காவலர்கள் பதவிக்காலம் முடிவடைந்ததால் திமுகவினர் பலர் அறங்காவலர் பதவிக்கு தீவிரமாக முயற்சித்தனர்.

இந்நிலையில் தமிழக அரசு ஏற்கெனவே இருந்த அறங்காவலர்களையே நியமனம் செய்தும் மேலும் 2 ஆண்டுகளுக்கு பதவி காலத்தை நீட்டிப்பு செய்தும் 2025 டிச.30 ல் உத்தரவிட்டது. இதில் அமைச்சர் பழனிவேல் தியாகராஜனின் தாயார் ருக்மணி பழனிவேல்ராஜன் மீண்டும் அறங்காவலர் குழுத் தலைவராக தேர்ந்தெடுக்கப் படவுள்ளார்.

# பொங்கலுக்கு பின் கூட்டணி நிலை குறித்து உறுதியான தகவல் வெளியாகும்: நயினார் நாகேந்திரன்

திருநெல்வேலி, ஜன.02-

தமிழகத்தில் பொங்கலுக்கு பின் கூட்டணியின் நிலை குறித்த உறுதியான தகவல்கள் வெளியாகும் என்று பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

திருநெல்வேலி அருகே கங்கைகொண்டான் வடகரை பகுதியில் பேச்சி ஓடையின் குறுக்கே நபார்டு நிதி உதவி யுடன் ரூ.6 கோடியில் அமைய வுள்ள பாலத்துக்கு அடிக்கல் நாட்டிய அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தில் தினமும் கொலை, கொள்ளை உள்ளிட்ட சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. போதைப் பொருட்கள் புழக்கம் கிராமங்கள் உட்பட அனைத்து இடங்களிலும் அதிகரித்துவிட்டது. கையில் புத்தகம் ஏந்தி கல்வி நிலையங்களுக்கு செல்லும் வயதில் அரிவாள் தூக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனை அறிந்து கொள்ளும் வகையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு நான் கடிதம் எழுதினேன்.

இதன் மூலம் சட்டப்பிரிவு 356 ஐ பயன்படுத்த போவதில்லை. மாறாக தமிழக மக்களே சட்டப்பிரிவு 356 ஐ பயன்படுத்த தயார் நிலையில் உள்ளனர். அதாவது மக்கள் மனதில்ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கான எண்ணத்தை திமுக ஆட்சியாளர்கள் ஏற்படுத்தி விட்டனர். நிச்சயமாக வரும் சட்டப்பேரவை தேர்தலுக்குப்பின் ஆட்சி மாற்றம் ஏற்படும். தேர்தலுக்கு இன்னும் 90 நாட்களுக்கும் அதிகமாக உள்ளன. பொங்கலுக்குப் பிறகு கூட்டணியின் நிலை குறித்து உறுதியான தகவல்கள் அறிவிக்கப்படும்.



வரும் 4ம் தேதி உள்துறை அமைச்சர் அமித் ஷா திருச்சி வருகிறார். புதுக்கோட்டையில் நடை பெறும் ‘தமிழகம் தலைநிமிர தமிழன்’ பயணத்தில் பங்கேற்க இருக்கிறார். மறுநாள் 5ம் தேதி ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலுக்கு சென்று வழிபாடு நடத்துகிறார். அன்றே டெல்லி திரும்புகிறார்.

தற்போதைய நிலையில் தமிழகத்துக்கு பிரதமர் வருகை இல்லை. பழனிசாமியுடன் ஓ.பன்னீர்செல்வம் இணைய வேண்டும். இணைவார்கள் என பல்வேறு தகவல்கள் வெளியாகி வருகிறது. ஆனால் அது குறித்து எனக்குத் தெரியவில்லை. அது அதிமுக விவகாரம். ஆனால் இருவரும் இணைய வேண்டும் என்பதுதான் எனது விருப்பம்.

பொங்கல் பரிசுத்தொகுப்பில் பணம் வழங்குவது குறித்த அறிவிப்பு வெளியிடப்படவில்லை. கடந்த ஆண்டு தமிழக அரசு பணம் எதுவும் கொடுக்கவில்லை. இந்த ஆண்டு நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் நிலையில் தனியாரிடம் கடன் வாங்கியாவது கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் உள்ளனர். தமிழகத்தின் அனைத்து திட்டங்களுக்கும் மத்திய அரசு 60 சதவீத நிதியை கொடுக்கிறது. மீதி உள்ள 40 சதவீதம் மட்டுமே மாநில அரசால் வழங்கப்படுகிறது. தமிழகத்தில் நிதி நிர்வாகமும் சரியில்லை நீதி நிர்வாகமும் சரியில்லை

தீபாவளிக்கு வாழ்த்து சொல்லாத சிலர் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவிப்பார்கள். அவர்கள் தமிழர் திருநாள் என கூறி தப்பித்துக் கொள்வார்கள். தீபாவளிக்கு வாழ்த்து சொல்லாமல் கிறிஸ்துமஸ் வாழ்த்துகள் மட்டும் தெரிவிக்கும் அவர்கள் போலி மதச்சார்பின்மையை கடைப்பிடிக்கின்றனர்.

கரூரில் 41 பேர் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து தீபாவளி கொண்டாட வேண்டாம் என தனது கட்சியினருக்கும் ரசிகர்களுக்கும் விஜய் உத்தரவிட்டிருந்தார். ஆனால் தற்போது கிறிஸ்துமஸ் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது போன்ற சம்பவங்களால் அவரும் ஒரு தரப்பினருக்கு ஆதரவாக செயல்படுகிறாரோ என எண்ணத் தோன்றுகிறது. இவ்வாறு நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.



## தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் ஒப்பந்த அடிப்படையில் தற்கால பணியாளர்கள் தேர்வு

தென்காசி, ஜன.02-

தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் காலியாக உள்ள Audiometric Assistant பணியிடத்தில் தற்காலிகமாக பணியாளர் மாவட்ட நலச்சங்கம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக தேர்வு செய்யப்படவுள்ளார்.

மேற்படி பணியிடத்திற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் கீழ்க்கண்ட கல்வித்தகுதியினை பெற்றிருக்க வேண்டும்.

Audiometric Assistant கல்வித்தகுதி: One year Audiologist Diplomo Course.

மேற்கண்ட பணியிடத்திற்கான விண்ணப்ப படிவங்கள், தென்காசி மாவட்ட வலைதளம் https://tenkasi.nic.in/notice_category/recruitment//-இல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 12.01.2026 அன்று மாலை 5 மணிக்குள் நேரிலோ/ தபால் மூலமாகவோ மாவட்ட சுகாதார அலுவலர் அலுவலகம் (இலத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகம்), இலத்தூர் - 627 803 என்ற அலுவலக முகவரியில் சமர்ப்பிக்கவேண்டும். 1 மாலை 5 மணிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே கமல்கிஷோர் தெரிவித்துள்ளார்.



■ திண்டுக்கல் சரக DIG-யாக இன்று பொறுப்பேற்றுக் கொண்ட Dr.P.Saminathan IPS.,



## திருப்பூர் மாவட்ட சுவரன் மாறன் கல்வி புத்தாண்டு விழா

திருப்பூர், ஜன.02-

திருப்பூர் மாவட்டம் மங்களம் ரோடு பாரப்பாளையம் எம் பி எஸ் தியேட்டர் அருகில் அறக்கட்டளை நடத்தும் இலவச பயிற்சி பள்ளியில் இன்று ஆங்கில புத்தாண்டு முன்னிட்டு அரசு பள்ளி மாணவர்களுக்கு கேக் வெட்டி சாக்லேட் வழங்கி கொண்டாடப்பட்டது மற்றும் பென்சில். நோட்டு புக் புத்தகங்கள் அனைத்தும்இலவசமாக வழங்கப்பட்டது கேக் சாக்லேட் இவற்றை முத்தரையர் ஒருங்கிணைப்பு குழு இளைஞர் அணி தலைவர் ஏ ஆர் பாண்டி அம்பலம் வழங்கினார்கள் நோட்புக் பென்சில் இவற்றை நம் திருப்பூர் மாவட்ட முத்தரையர் ஒருங்கிணைப்பு குழு சேர்ந்த மணிமாறன் ஐயா அவர்கள் வழங்கினார்கள் இவர்களோடு டீச்சர் ஆர்த்தி ஹிந்தி டீச்சர் வடிவு ஆகியோர் உடன் இருந்தனர் இறுதியாக பிரகாஷ் ஆர்ட் கேலரி மற்றும் சுவரன் மாறன் கல்வி அறக்கட்டளை நிர்வாகி டாக்டர் தர்மராஜ் அவர்கள் வந்திருந்த அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்து. தெரிவித்தனர்.



■ மதுரை மாவட்டம் பாலமேட்டில் வரும் 16ஆம் தேதி ஜல்லிக்கட்டு நடைபெற உள்ளதை முன்னிட்டு வாடிவாசல் பகுதியில் வர்ணம் பூசும் பணி நடைபெற்று வருகிறது.

# ராமேசுவரம் ராமநாதசுவாமி கோயிலில் ஜன.3ல் ஆருத்ரா தரிசனம்

ராமேசுவரம், ஜன.02-

ராமேசுவரம் ராமநாத சுவாமி கோயிலில் (ஜன.3) ஆருத்ரா தரிசனம் நடைபெறுகிறது.

ராமேசவரம் ராமநாத சுவாமி கோயில் ருத்ராட்சை நடராஜர் மண்டபத்தில் கடந்த டிச.25 அன்று ஆருத்ரா தரிசன திருவிழா காப்பு கட்டுதலுடன் தொடங்கியது. திருவிழாவை முன்னிட்டு தினந்தோறும் ராமநாதா சுவாமி கோயில் மூன்றாம் பிரகாரத்தில் மாணிக்கவாசகர் தங்க கேடயத்தில் உலா வரும் நிகழ்ச்சியும், நடராஜருக்கு சிறப்பு மகா தீப ஆராதனை மற்றும் பூஜைகளும் நடைபெற்றன.



திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியாக ஆருத்ரா தரிசனம் நிகழ்ச்சியை முன்னிட்டு நாளை மறுநாள் ஜனவரி 3 அன்று (சனிக்கிழமை) ராமநாதசுவாமி கோயிலில் அதிகாலை 2 மணியளவில் நடை திறக்கப்பட்டு, 03.00 மணி முதல் 3.30 மணி வரை ஸ்படிக லிங்க பூஜையும், திருப்பள்ளி எழுச்சி பூஜையும், நடராஜருக்கு அபிஷேகமும் நடைபெறும்.

தொடர்ந்து கோயில் மூன்றாம் பிரகாரம் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ள சபாபதி சன்னதியில் நடராஜருக்கு சிறப்பு அபிஷேகங்கள் நடைபெறும். பின் 4:15 மணிக்கு சபாபதி சன்னதிக்கு மாணிக்க வாசகர் எழுந்தருளை தொடர்ந்து திரை விலகுதல் நடைபெறும். காலை 5:15 க்கு நடராஜருக்கு ஆருத்ரா தரிசனம் தீபாராதனை நடைபெற்ற பின் பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதி வழங்கப்படும்.

காலை 10 மணிக்கு மேல் ஸ்ரீநடராஜர் பஞ்சமூர்த்திகளுடன் நான்கு ரத வீதியில் உலா, அதனை தொடர்ந்து பகல் 12 மணிக்கு சிவ தீர்த்ததில் தீர்த்தவாரி உற்சவம் நடைபெறும்.

சனிக்கிழமை இரவு 7:30 மணிக்கு ஊஞ்சல் நலுங்கு வைபவம் தீபாராதனை அதன்பின் சுவாமி அம்பாள் ஏக சிம்மாசனத்தில் எழுந்தருளி வீதி உலா நடைபெறும் என கோயில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000